

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், கோலியனூர் ஊராட்சியில் நடைபெற்ற, "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் பி.தெய்வசிகாமணி, க.மும்மூர்த்தி, தே.முருகவேல், வேம்பி.ரவி, ஒன்றிய குழு தலைவர் சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர்கள் தமிழ் செல்வி கேசவன், வனிதா அரிராமன், ஒன்றிய குழு துணை தலைவர் உதயகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### திருமயம் - பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்

# நியாயவிலைக் கடை - புதிய மின் மாற்றிகள்! தார்ச்சாலைப் பணி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து - அடிக்கல் நாட்டினார்!

புதுக்கோட்டை ஆக.15

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைச்சர் எஸ்.ரகுபதி புதிய நியாய விலைக் கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, புதிதாக அமைக்கப்படவுள்ள தார்ச் சாலைப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 09.08.2024 அன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, லேனாவிளக்கு முதல் சொக்கநாதபட்டி வரை ரூ.100 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணியினை அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் வசித்துவரும் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தும், பல்வேறு புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டும் வருகிறது. அதன்படி திருமயம் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை மற்றும் புதிய மின்மாற்றிகளை திறந்து வைத்து, ரூ.100 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணி அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப் பட்டது.

புலிவலம் கிராமத்தில் புதிய நியாய விலைக்கடை திறந்து வைத்ததன் மூலம், இப்பகுதி பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று குடிமைப் பொருட்கள் பெற்று வந்தது தவிர்க்கப்பட்டு, தங்களின் இல்லங்களுக்கு அருகாமையிலேயே குடிமைப் பொருட்கள் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய நியாய விலைக்கடையினை இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், புலிவலம் ஊராட்சி, லேனாவிளக்கு முதல் சொக்கநாதபட்டி வரை புதிதாக அமைக்கப்படவுள்ள தார் சாலைப் பணியினை தொடர்புடைய அரசு அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப் பட்டுள்ளது.

எனவே தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்களை பொது மக்கள் அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், கொத்தவயல் இளஞ்சாவூர் கிராமத்தில், குறைவான மின் அழுத்தத்தை சரி செய்யும் வகையில் 25KVA/11KV புதிய மின்மாற்றியினையும், தச்சம்பட்டி கிராமத்தில் 63KVA/11KV புதிய மின் மாற்றியினையும், கட்டயாண்டிபட்டி கிராமத்தில் 25KVA/11KV புதிய மின் மாற்றியினையும், தொட்டியம்பட்டி கிராமத்தில் 25KVA/11KV புதிய மின் மாற்றியினையும், பொன்னமராவதி பேருந்து நிலையம் அருகில் 63KVA/11KV புதிய மின்மாற்றியினையும், ஏனாவயல் கிராமத்தில் 63KVA/11KV புதிய மின் மாற்றியினையும் துவக்கி வைத்தார். இதன்மூலம் இப்பகுதியில் உள்ள வீடுகள், விவசாய பம்பு செட்டுகள் ஆகியவைக்கு சீரான மின்விநியோகம் செய்யப் படும்.

இந்நிகழ்ச்சிகளில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, திருமயம் ஒன்றியக்குழுத் தலைவர் அழ.ராமு, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், மின்சார வாரிய செயற்பொறியாளர் த எம்.ஆனந்தாய், திருமயம் வட்டாட்சியர் புவியரசன், பொன்னமராவதி வட்டாட்சியர் எம். சாந்தா முருகேசன், புலிவலம் ஊராட்சிமன்றத் தலைவர் அ.கருப்பாயி மற்றும் இரா.கணேசன், அ.சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்ற அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### அதானி முறைகேடுகள்:

# விசாரணையை விரைந்து முடிக்க 'செபி'க்கு உத்தரவிட வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் புதிய மனுத் தாக்கல்!

புதுடெல்லி, ஆக.14-

அதானி முறைகேடு தொடர்பாக 'செபி' விரைவாக விசாரணையை முடிக்க உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதானி குழுமத்தின் பங்குச்சந்தை முறைகேடுகள் தொடர்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவைச் சேர்ந்த முதலீட்டு ஆய்வு நிறுவனமான ஹிண்டன்பர்க் வெளியிட்ட அறிக்கை, உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அதானி குழும நிறுவனங்கள், பெரும் இழப்பைச் சந்தித்தன. உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டதையடுத்து, பங்குச்சந்தையில் அதானி குழு மத்தின் முறைகேடு குறித்து விசாரணை நடத்த 'செபி'க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்பின்னர், விசாரணை நடத்திய 'செபி', கடந்த மாதம் ஹிண்டன் பர்க் அமைப்புக்கு நோட்டீஸ் அனுப்பியது.

இந்நிலையில், இந்தியா குறித்த மற்றொரு அறிக்கையை வெளியிட உள்ளதாக ஹிண்டன் பர்க் நிறுவனம் அறிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச்சூழலில் கடந்த 10ஆம் தேதி ஹிண்டன்பர்க் வெளியிட்ட அறிக்கையில், அதானி நிறுவனத்தின் வெளிநாட்டு முதலீடுகளில் செபி அமைப்பின் தலைவர் மாதபி புச்க்கும், அவரது கணவருக்கும் பங்குகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதற்கான அனைத்து ஆதாரங்களும் தங்களிடம் இருப்பதாகவும், முறையான ஆய்வுக்கு பின்னரே இந்த தகவலை வெளியிட்டுள்ளதாகவும் ஹிண்டர்பர்க் தெரிவித்தது.

இந்த விவகாரம் பூதாகரமாக சென்று கொண்டிருக்கும் நிலையில், அதானி முறைகேடு தொடர்பாக 'செபி' விரைவாக விசாரணையை முடிக்க உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு 18 மாதங்களாகியும், அதானி குழுமத்தின் பங்குச்சந்தை முறைகேடு குறித்து, செபி இன்னும் விசாரணையை முடிக்கவில்லை என்றும், நிலுவையில் உள்ள விசாரணையை செபி விரைந்து முடிக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டுள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்ட காரிமங்கலம் கழக அலுவலகத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் கலைஞரின் பெயரில் ரூ.100 நாணயம் வெளியிடுவதற்கு நன்றி,மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை,தொகுதிக்கு ஒரு நூலகம்,சட்டமன்ற தொகுதி வாரியாக கலைஞர் சிலை அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. உடன் மாநில நிர்வாகிகள் கீரை.எம்.எஸ்.விஸ்வநாதன்,சூடப்பட்டி சுப்ரமணி,சத்தியமூர்த்தி,மாவட்ட பொருளாளர் முருகன்,மாவட்ட துணை செயலாளர்கள் கிருஷ்ணகுமார்,ராஜகுமாரி மற்றும் ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை சேப்பாக்கம், தோட்டக்கலைத்துறை இயக்குநரகத்தில், நேற்று முன்தினம் (13.08.2024) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தோட்டக்கலைத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில்

# தோட்டக்கலைத்துறை ஆய்வுக் கூட்டம்!

## வேளாண்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்பு!

சென்னை, ஆக.15

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தோட்டக் கலை துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் (13.08.2024) சென்னை, சேப்பாக்கம் தோட்டக்கலைத்துறை இயக்குநரகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பு குறித்து மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இடம் சார்ந்த விவசாயம் மேற்கொள்ள வேண்டும் என்றும், அதிக மக்கள் தொகை கொண்ட சென்னையில் காய்கறி வரத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு அனைத்து அலுவலர்களும் செயல்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், தோட்டக் கலை பயிர்களின் சாகுபடியை விரிவுபடுத்த அனைத்து அலுவலர்களும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், கீரைகள் மற்றும் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

தோட்டக்கலைத் துறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் அனைத்து தோட்டக்கலைப் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், புதிய ரக பழச் செடிகளை நடவு செய்யவும் வலியுறுத்தினார்.

மேலும், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் நல்ல மழைப்பொழிவு இருப்பதால் அனைத்துத் தோட்டக்கலைத் திட்டங்களுக்கான பழச்செடிகளையும் உடனடியாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட வேண்டும் எனவும், அனைத்துத் திட்டங்களையும் விரைந்து முடித்திடவும் அறிவுரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பூங்காக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கலைஞர் நூற்றாண்டு பூங்காவின் கட்டமைப்பு பணிகளை துரிதப் படுத்தி முடித்திட அறிவுறுத்தினார்.

பருவமழை காலங்களிலும், பருவமற்ற காலங்களிலும் பெய்யும் மழை பொழிவினால் ஏற்படும் சேதங்களைத் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், விவசாயிகளை நேரில் சந்தித்து உரிய ஆலோசனை வழங்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் சாதனை விவரங்கள் குறித்து மாவட்டம் வாரியாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடித்திடுமாறு அறிவுறுத்தினார்.

மேலும், தோட்டக்கலைத் துறையின் கீழ் இயங்கி வரும் மகத்துவ மையங்களின் தற்போதைய செயல்பாடுகளையும் தோட்டக்கலை பயிற்சி மையங்களின் பயிற்சி குறித்தும் கேட்டறிந்தார். புதிய தொழில் நுட்பங்களை அனைத்து மகத்துவமையங்களிலும் செயல் விளக்கம் செய்யவும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், செல்வி. அபூர்வா, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், வேளாண்மை இயக்குநர், பா.முருகேஷ் மற்றும் தோட்டக்கலைத் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென் சென்னை, வட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள

# பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு ஆன்லைன் பஸ் பாஸ் வழங்கும் சிறப்பு முகாம்கள்!

சென்னை, ஆக.15

தென் சென்னை, வட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு ஆன்லைன் பஸ் பாஸ் வழங்கிட சிறப்பு முகாம்கள் வரும் 20.08.2024-ஆம் தேதி முதல் 23.08.2024-ஆம் தேதி வரை 4 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறுகிறது. இந்த முகாமில் கீழ்க் கண்ட மாவட்டங்களை சார்ந்த அனைத்து பார்வை மாற்றுத்திறனாளிகளும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தென் சென்னை - மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தென்சென்னை, டி.எம்.எஸ்.வளாகம், சென்னை - 600 006. மாநில வள மற்றும் பயிற்சி மையம் (எஸ்.ஆர்.டி.சி.), கே.கே.நகர், சென்னை-600 078. புனித லூயிஸ் செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளி, அடையாறு, சென்னை - 600 020. சிறுமலர் பார்வைத்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப்பள்ளி, தேனாம் பேட்டை, சென்னை -600 018.

வட சென்னை - மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், வட சென்னை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை-600 001. அன்பாலயா அறிவுசார் குறையுடையோருக்கான சிறப்பு பள்ளி, திருவொற்றியூர், சென்னை -600 019. மேரி கிளப் வாலா செவித்திறன் குறையுடையோருக்கான சிறப்பு பள்ளி, அண்ணா நகர் பஸ் டிப்போ அருகில், அண்ணா நகர், சென்னை-600 040.

செங்கல்பட்டு - மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், செங்கல்பட்டு. முக்தி செயற்கை அவயவங்கள் (கை/கால்) நிலையம், மீனம்பாக்கம் ரயில் நிலையம் அருகில், சென்னை.

காஞ்சிபுரம் - மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், காஞ்சிபுரம். சேக்கிழார் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, குன்றத்தூர்.

திருவள்ளூர் -மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், திருவள்ளூர். பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி பூவிருந்தவல்லி.

மேற் குறிப்பிடப்பட் டுள்ள முகாம்களில் கலந்து கொள்ளும் பார்வை மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடை யாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், கைப்பேசி, UDID அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றுடன் நேரில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.



கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியின் கரூர் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற செல்வி செ.ஜோதிமணி எம்.பியை வெற்றி பெறச்செய்த வாக்காள பெருமக்களுக்கு விராலிமலை மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர், வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் வி.முருகேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.அய்யப்பன், மு.பி.ம.சத்தியசீலன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட கவுன்சிலர் சாந்தி தங்க சிங்கம், செல்லத்துரை, தமிழினியன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.